**மொரட்டுவை பல்கலைக்கழக தொழிநுட்ப நிறுவகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மொரட்டுவை பல்கலைக்கழக தொழிநுட்ப நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 205,322,908 பெறுமதியான முதலீட்டு ஆதனங்களினை மதிப்பீடு செய்யும் அடிப்படை இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 13 பிரகாரம் நிதிக்கூற்றுகளில் | தாங்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள முதலீட்டு சொத்துக்களுக்கு உரிய பெறுமதிகளின் பட்டோலை E (Schedule- E) இறுதிக் கணக்குகளின் பக்க இலக்கம் 29 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | பட்டியல் E இல் அந்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதுடன் அந்த முதலீட்டுச் சொத்துக்களுக்கு உரிய சொத்து வகைப்படுத்தல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 13 செலவின உருப்படிகளின் மதிப்பீட்டு கிரயத்தின் ரூபா 3,621,257 மிகை ஒதுக்கம் இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியம இலக்கம் 03 இன் 39 ஆம் பந்திக்கு முரணாக ஆண்டிற்கான வருமானத்திற்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக பொது ஒதுக்கங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | தாங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,621,257 பெறுமதியானது அட்டுறு செலவினங்களுக்கு உரிய மிகைக் கணிப்பீடு ஆகும். இந்த அட்டுறுச் செலவினங்கள் 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் இனம் காணப்பட்ட செலவினங்கள் என்பதுடன் இவ்வாறு கடந்த வருடங்களுக்கு உரியதாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு வங்கி கணக்குகளுக்கு உரிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 53,000,000 கூட்டுத் தொகையான இரவு நேர முதலீடுகள் காசுப் புத்தகத்தின் மீதியில் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் காசுப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 18,320,420 தொகையான மறை மீதி ஒன்று நிலவிய போதிலும் நிதி நிலைமையை கூற்றில் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,679,580 ஆக காண்பிக்கப்பட்டது. | இந்த இரு கணக்குகளுக்கும் உரிய திருத்தப்பட்ட காசு மீதி மறை பெறுமதியாக காரணமாக அமைந்தமைக்கு காரணம் பொது திறைசேரியின் இரவு நேர வைப்புக்களில் பணம் முதலீடு செய்தமை ஆகும். இந்த மறை பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்படல் பொருத்தமற்றது என்பதால் இவ்வாறு குறுங் கால முதலீடுகளில் காண்பிப்பதற்கு பதிலாக உரிய மீதிகள் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும் 2024 ஜனவரி மாதம் முதல் சரியான காசு மீதியை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த தவறை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக ஒதுக்கப்பட்ட செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 1,406,400 ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த ஆண்டுகளுக்கு மீண்டும் ரூபா 1,406,400 நிதியேற்பாடு பொது ஒதுக்கங்கள் கணக்கிற்கு சீராக்கப்பட்டு இருந்தது. | 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் திருத்தப்பட்டுள்ளது என்பது. | இந்த தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தின் மற்றும் இயந்திரப் பொறியியலாளர் திணைக்களத்தின் பராமரிப்புச் செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 485,000 தொகையானது வருமான செலவினமாக பதிவழிக்கப்படுவதற்கு பதிலாக மூலதனம் ஆக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது என்பது. | மூலதன மற்றும் வருமானச் செலவினங்கள் சரியாக இனம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த வருடத்திற்கு உரியதாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 7,939,011 தொகை ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பெறவேண்டிய கணக்கில் அந்த மீதி பொது ஒதுக்க கணக்கிலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடந்த வருடங்களில் பெறவேண்டிய வருமானங்கள் மற்றும் நடப்பாண்டில் கிடைத்திருந்த வருமானம் இனங்காணப்பட்டு அதற்கமைய கணக்கு வைப்பதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என்பது. | ஆண்டிக்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | கடைகள் மற்றும் வியாபாரத் தொகுதிகளில் இருந்து | கடைகள் மற்றும் வியாபார தொகுதிகளில் இருந்து | ஆண்டின் அனைத்து வருமானங்களும் |

| | | |
|---|---|---|
| கிடைத்த வருமானத்தில் ரூபா 4,421,623 ஆண்டிற்கான வருமானமாக கணக்கு வைக்கப்படாது நிறுவனத்தின் நிதியங்களுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டின் ஏனைய வருமானங்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கிடைக்கும் வருமானத்தில் தொழில்நுட்ப நிறுவன அபிவிருத்தி நிதியம், சேமலாப நிதியம், பல்நோக்கு அபிவிருத்தி நிதியம் மற்றும் பணிப்பாளர் நிதியம் ஆகிய நான்கு நிதியங்களுக்கு உரிய விகிதங்களை செலவு வைத்தல் நிதி குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பது. | நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி சார் விடுமுறைகளை பெற்று வெளிநாடு சென்ற இரு பேராசிரியர்களின் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகள் மீறப்பட்டமையின் அடிப்படையில் 2023 டிசம்பர் 31 ஆன் திகதியில் உள்ள படியாக ரூபா 12,571,822 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | உரிய பிணை முறிக்கு பணம் செலுத்துமாறு குறிப்பிட்டு அந்த பேராசிரியர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | பிணை முறி மீறிகளை மீறிய உத்தியோகத்தர்களிடம ிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாணவர் உதவி தொகை மற்றும் புலமைப் பரிசில் மீதிகள் முறையே ரூபா 3,029,900 மற்றும் ரூபா 453,650 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | மாணவர் உதவித்தொகை மற்றும் புலமை பரிசில் மீதிகளை தீர்த்தனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 01 முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா | இந்த கடன் கொடுத்த மீதிகளை விடுவித்தல் தொடர்பில் 2024 ஆம் | தாமதம் இன்றி பொறுப்புக்களை தீர்ப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 5,725,853 தொகை மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,612,584 தொகையான கடன் கொடுத்தோர் மீது களை தீர்ப்பனவோ செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் இயலுமான அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான நீல செலுத்த வேண்டிய விலை கேள்வி காப்பீட்டு வைப்புக்கள் மற்றும் நீல செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 861,920 தொகையானது 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலை கேள்வி காப்பீட்டு வைப்புகள் மற்றும் 02 வருடங்களை மிஞ்சிய அனைத்து வைப்புகள் தொடர்பிலும் 2024 ஆம் ஆண்டில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய வாய்ப்புகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 10,503,679,754 கிரயமான நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றினை நாளதுவரையாக பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடுக்காக கணினி மென்பொருள் காணப்படுவதுடன் அதில் உள்ள சிறு சிறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து அதனை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணை குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்க | கல்வி சார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாது மீளாய்வாண்டினுள் ரூபா 209,826,653 | பல்கலைக்கழக கட்டமைப்பினில் எந்த ஒரு நிறுவனத்திலும் வருகை அல்லது வெளிச்செல்லல் ஆகியவற்றை பதிவு செய்தல் கல்வி சார் | உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| ான தாபன விதி கோவை IX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணியால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பது. | எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 516,415,005 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 698,739,979 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 182,324,974 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்கள் ரூபா 52,367,889 இனால் மற்றும் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் கிடைத்த மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 29,772,227 இனால் அதிகரித்தமையும், பெறுமானத்தேய்வு மற்று காலக்கழிவு செலவினத்தின் ரூபா 168,980,883 ஆக குறைவும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்நுட்ப நிறுவனத்தை மீள நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயல் திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,821,053,785 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த காணியின் சட்ட ரீதியான உரித்து 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்தினை தீர்பனவு செய்யுமாறு ஹோமகம பிரதேச செயலாளருக்கு 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | காணியின் சட்ட ரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 8,821,053,785 தொகையான கட்டிடத் தொகுதியினுள் அமைந்துள்ள ஆறு மாடிகளை கொண்ட விடுதி கட்டிடங்கள் 2 இன் இரு தளங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன், மேலும் இரு தளங்களின் அறைகள் ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, அந்த தலங்களுக்கு | பூர்த்தி செய்யப்படாத கட்டுமானங்களை பூர்த்தி செய்வதற்கு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் அந்த கட்டுமானங்களை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. எனினும், இந்த பூர்த்தி செய்யப்படாத கட்டுமானங்கள் | பூர்த்தி செய்யப்படாத கட்டுமானங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| தரமான மற்றும் உபகரணங்களை விநியோகித்தல் மற்றும் 02 கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்காத போது, 2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பணிப்பாளரினால் கட்டிடம் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்காமையால் 2017 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு செய்யப்பட்ட 2024 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியினுள் இயற்கை அழிவுகளுக்கு முகம் கொடுத்த காரணத்தால் ஏனைய பகுதிகளுக்கும் சேதம் இடம்பெறுவதற்கு உரிய அச்சுறுத்தல் நிலவுகின்றது. | தொடர்பில் ஒவ்வொரு கல்வி அமைச்சிடம் அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்பது. | |

3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஏனைய நிதியங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 19,753,388 கூட்டுத் தொகையானது 01 முதல் 12 வருட காலமாக செயலற்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் 09 நிதியங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 4,352,305 உள்ளடங்களாக ரூபா 25,190,592 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 19,753,388 பெறுமதியான இந்த நிதியங்களுக்கு இதுவரையிலும் கோரிக்கை பத்திரங்கள் கிடைக்கவில்லை என்பது. | குறித்த நிதியங்கள் உரிய நோக்கத்திற்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாது 2014 ஆம் ஆண்டில் ரூபா 205,322,908 கிரயமான 13 கடைகளுடனான வியாபார தொகுதி ஒன்று மற்றும் விருந்தினர் மாளிகை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 05 கடைகள் | கடந்த வருடங்களில் கடைத்தொகுதியின் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய முறையில் விலை கேள்வி பத்திரங்கள் கிடைத்திடாததுடன் வியாபாரங்களை ஆரம்பித்த ஒப்பந்ததாரர்களும் | இந்த கட்டிடங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு உரிய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு முதல் 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் வருமானம் ஈட்டாது காணப்பட்டது. அவ்வாறு விருந்தினர் மாளிகையும் பராமரிப்பு செலவினத்திற்கு போதுமான வருமானம் ஈட்டப்படாது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியினுள் வியாபாரம் தோல்வியடைந்ததாக குறிப்பிட்டு திறப்பினை கையளித்திருந்தனர். மேலும், மிகவும் அதிக கிரயம் மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த விருந்தினர் மாளிகைக்கும் எதிர்பார்த்த அளவில் வருமானம் காணப்படவில்லை. இவற்றுக்கு உரிய மேம்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவை வெற்றிகரமாக செயல்பட்டிருக்கவில்லை. | |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை செயல்வழி கையேட்டின் 6.6 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 05 மாதங்களினுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கையானது 2024 மார்ச் 26 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பொருத்தமானது என 2024.02.26 ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு ஒப்படைக்கப்பட வேண்டிய திகதி பாராளுமன்றத்தினால் குறிப்பிடப்படும் வரையிலும் குறித்த அறிக்கை தயார்படுத்தப்படுகின்றமை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |